# புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005
## எவ்வாறு இச்சட்டம் பாதிக்கிறது : ஹோம் ஹெல்த் கேர் ஊழியர்களை

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.

## ஹோம் ஹெல்த் கேர் (வீடு வந்து உடல்நலம் பேணும்) ஊழியர்கள்

ஒரு ஹோம் ஹெல்த் கேர் ஊழியர் என்பவர் சுகாதார மற்றும் நீண்ட-காலபராமரிப்பு அமைச்சகம் அல்லது உள்ளூர் சுகாதார ஒருங்கிணைப்பிடமிருந்து நிதி உதவி பெறும் ஒரு சமூக பராமரிப்பு தொடர்புக் கழகம் அல்லது நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சுகாதார-பராமரிப்பு அல்லது ஆதரவு சேவைகளை தனியார் இல்லங்களில் (உதாரணம் பேணிக்காத்தல், வாடிக்கையாளருக்கு குளிக்க உதவுதல், வீட்டை பராமரிக்க உதவல் போன்றவை) வழங்குபவர் ஆவார்.

## ஹோம் ஹெல்த் கேர் ஊழியர்களுக்கான பாதுகாப்பு

- சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்குகையில் தங்கள் முன்னிலையில் புகைபிடிக்க வேண்டாம் என்று சொல்லும் உரிமை ஹோம் ஹெல்த் கேர் ஊழியர்களுக்கு உண்டு.
- எவரேனும் வேண்டுகோளை மறுத்தால் மேலும் சேவையை வழங்காமலேயே ஹோம் ஹெல்த் கேர் ஊழியர் அவ்விடத்தை விட்டு அகலலாம்- அவ்வாறு செய்கையில் எந்த ஒரு நபருக்கும் ஒரு உடனடியான, மோசமான ஆபத்தை விளைவிக்காதபட்சம்.

## வாடிக்கையாளர் ஒருவரிடன் வீட்டில் எவரேனும் புகை பிடிப்பதால் அவ்வீட்டை வீட்டு வெளியேறும் ஹோம் ஹெல்த் கேர் ஊழியரின் கடமைகள்

வீட்டை விட்டு வெளியேறிய 30 நிமிடங்களுக்குள்ளாகவோ அல்லது முடிந்த அளவு விரைவாகவோ ஹோம் ஹெல்த் கேர் ஊழியர் தன்னை வேலைக்கு நியமித்தவரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கீழ்க்கண்டவற்றை செய்ய வேண்டும்.

- தாங்கள் ஏற்கனவே வெளியேறி விட்டதை தெரிவிக்க வேண்டும், மற்றும்
- சூழ் நிலைகளை பற்றிய தகவல்களை அளிப்பதுடன், அடுத்த 24 மணி நேரத்தில் கீழ்க்கண்டவை உள்ளிட்ட வாடிக்கையாளர் பராமரிப்புத் தேவைகள் குறித்த தகவலையும் வழங்கவேண்டும்:
    - வாடிக்கையாளரைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ள ஒரு பொருத்தமான மனிதர் அங்கு இருக்கிறாரா.
    - வாடிக்கையாளருக்கு அடுத்த 24 மணி நேரத்தில் கவனிப்பு தேவைப்படுமா.
    - ஹோம் ஹெல்த் கேர் ஊழியர் வெளியேறியபோது வாடிக்கையாளர் என்ன நிலைமையில் இருந்தார், மற்றும்
    - பழக்கத்திற்கு மாறான சூழ்நிலை ஏதேனும் காணப்பட்டதா, அப்படியானால் அது என்ன.

மேலும் சுகாதார பராமரிப்பு சேவைகள் வழங்கப்படும் அல்லது வழங்கப்பட உள்ள நபர் பத்திரமாக இருக்கவும் கணிசமான அளவு அக்கறையுடன் சேவை அளிக்கப் படுவதையும் உறுதியளிக்கும் பொருட்டு வேலைக்கு அமர்த்திக் கொள்பவரால் வழங்கப்படும் ஏதேனும் நெறிமுறைகளையும் ஹோம் ஹெல்த் கேர் ஊழியர் பின்பற்ற வேண்டும்.

## பணியிலமர்த்திக் கொள்பவரின் கடமைப் பொறுப்புக்கள்

தங்கள் முன்னிலையில் புகை பிடிக்க வேண்டாம் என்ற ஊழியரின் வேண்டுகோளை யாரோ ஒருவர் மறுத்து விட்டார் என்ற காரணத்துக்காக வாடிக்கையாளர் வீட்டை விட்டு விலகுவதை தேர்ந்தெடுத்த ஒரு ஊழியரின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்களுடன் தங்களை பழக்கப்படுத்திக் கொள்ளுமாறு ஹோம் ஹெல்த் கேர் ஊழியர்களின் முதலாளிகள் அறிவுறுத்தப் படுகின்றனர்.

## அமலாக்கம்

இந்த சட்டத்துக்கு இணங்குவதை உறுதிபடுத்துவது உள்ளூர் அரசு சுகாதார பிரிவுகளின் பொறுப்பாகும்.

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும்  நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario